දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. )07/A/D/108/2015(I)

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date )2016.11. 15

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

---

**பொது சுற்றறிக்கை இலக்கம் :** 01 - 61 / 2016

சகல மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளர்கள்,
சகல மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
சகல மத்திய அரசின் கீழுள்ள
இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம்,
சகல வைத்தியசாலை பணிப்பாளர்கள்
அடங்கலாக எல்லா தாபனத்தலைவர்களுக்கும்,

<u>மருத்துக்கலவை உத்தியோகத்தர்களை இடைநிலை மருத்துவ சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல்.</u>

2016.10.11 ம் திகதியிலிருந்து செயல்படும் வண்ணம் மருந்துக்கலவை உத்தியோகத்தர் சேவையானது இலங்கை தொழில்நுட்ப சேவையில் இருந்து நீக்கப்பட்டு இடைநிலை மருத்துவ சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை பத்திர இலக்கம் அமப /16/1911/718/077 மற்றும் 2016.10.19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

02. இவ்வுத்தியோகத்தர்கள் சம்பந்தமாக இடைநிலை மருத்துவ சேவை MT-04 சம்பள குறியீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 MT-04 சம்பள திட்டமான ரூபா 31,190-10x445-11x660-10x730-10x750-57700 உரியதாகும். சம்பளம் வழங்கும் போது அச்சுற்றுநிருபத்தின் விதிகள் கவனத்திலிருத்தல் வேண்டும்.

| தரம் | ஆரம்ப சம்பளப்படி | ஆரம்ப சம்பளம் |
|---|---|---|
| III ம் தரம் | ஆரம்ப சம்பளப்படி | ரூபா 31,190/- |
| II ம் தரம் | 12 ம் படி | ரூபா 36,300/- |
| I ம் தரம் | 23 ம் படி | ரூபா 43,630/- |

03. 2016.10.11 ஆம் திகதியில் தற்போது MN-3 -2016 சம்பளத்திட்டத்தில் III , II மற்றும் I ம் தரத்தில் சம்பளம் பெறுகின்ற மருந்துக்கலவை உத்தியோகத்தர்கள் முறைப்படி MT - 04- 2016 சம்பள திட்டத்தில் III ,II மற்றும் Iம் தரங்களுக்கு தாபன விதிக்கோவை VII ம் அத்தியாயத்தின் 4ம் பிரிவின் விதிகளுக்கு அமைவாக உள்ளீர்ப்பு செய்யப்படுகின்றார்கள்.

04. இருந்த போதும் உள்ளீர்ப்பு செய்வதன் காரணத்தால் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்திகதியில் மாற்றம் செய்யக்கூடாது என்பதுடன், இத்திகதியானது உள்ளீர்ப்பு செய்யப்படும் திகதிக்கு முன்பு இருந்த திகதியாக மாற்றமடையாமல் இருத்தல் வேண்டும். மேலும் சம்பள மாற்றம் செய்யும் போது உத்தியோகத்தர் கடைசியாகப் பெற்ற சம்பளப்படியானது புதிய சம்பளத்திட்டத்தில் சமமாக இருப்பின் தாபன விதிக்கோவை VII ம் அத்தியாயம் 4:4 பிரிவின் கீழ் அடுத்த சம்பளப் படிநிலை வழங்கப்படக்கூடாது.

05. எனினும், உள்ளீர்ப்பு செய்வதனால், மருந்துக்கலவை உத்தியோகத்தர் ஒருவரது சம்பளம், சமமான சேவைக்காலம் உள்ள இடைநிலை மருத்துவ உத்தியோகத்தரது சம்பளத்தை மீறிச்செல்லுமாயின் இடைநிலை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு மருந்துக்கலவை உத்தியோகத்தர்கள் அவர்களது தரத்திற்கேற்ப சிரேஷ்ட நிலையானது இடைநிலையில் வைத்தல் வேண்டும்.

06. மருந்துக்கலவை உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக MT-04-2016 சம்பளக்குறியீட்டுக்குரிய புதிய ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வுத்திட்டம் உரிய காலத்தில் மாற்றம் செய்யப்பட்டு உங்களுக்கு அறியத்தரப்படும்.

பதிற்கடமை செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

பிரதிகள் :

01. செயலாளர், அரச சேவைகள் ஆணைக்குழு - தகவலுக்காக
02. கணக்காய்வாளர் நாயகம் - தகவலுக்காக
03. செயலாளர், அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு - தகவலுக்காக
04. செயலாளர், நிதி அமைச்சு - தகவலுக்காக
05. தலைவர், தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு – தகவலுக்காக